**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC.160 of 2022 |
| Prosecution Witness | : | PW7 |

**10.11.2025**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : செந்தில்குமார் | Calling | : | மருத்துவர் |
| Father Name | : ஆதிகிருஷ்ணன் | | : | |
| Village | : முசிறி | Age | : | 50 |
| Taluk | : முசிறி | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

1வது எதிரி ஆஜரில்லை. மனு அனுமதிக்கப்பட்டது. 2,3 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது முசிறி அரசு மருத்துவமனையில் எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். மருத்துவர் மாலினி என்பவரின் எனக்கு நன்கு அறிமுகம். அவர் மும்பைக்கு பணிக்கு சென்றுவிட்டார். அவர் தற்போது எங்கு இருக்கிறார் என்று தெரியாது. அவர் கடந்த 07.04.2022 அன்று பணியிலிருந்தபோது, இரவு 10.50 மணிக்கு 63 வயது மதிக்கத்தக்க வள்ளியம்மை என்பவரை சிகிச்சைக்காக அவரது கணவர் அழைத்து வந்தார். அவரை விசாரித்தபோது, அன்றைய தினம் இரவு 09.30 மணியளவில் அவரது வீட்டில் வைத்து தெரிந்த ஒரு நபர் கற்களால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. வலது முழங்கையில் 4x4 செ.மீ அளவில் வீக்கக்காயம் காணப்பட்டது.
2. வலது கையில் 0.5x0.5 cm அளவில் குத்து காயம் காணப்பட்டது.
3. வலது மணிக்கட்டில் வீக்க காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்துள்ளார். அவருக்கு நுண்கதிர் படம் எடுத்து பார்த்ததில் அவரது வலது முன் கையில் அல்னா என்ற எலும்பு முறிவு இருந்தது என்று எலும்பு முறிவு மருத்துவர் சான்று வழங்கியதால் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளார். அவர் மருத்துவமனையிலிருந்து 11.04.2022 அன்று விடுவிக்கப்பட்டுள்ளார். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

மருத்துவர் மாலினி எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை மருத்துவர் இல்லை. வெளியில் தெரியாத காயங்களில் எலும்பு முறிவை எக்ஸ்–ரே மற்றும் ஸ்கேன் மூலம் தான் கண்டுபிடிக்க இயலும். இந்த வழக்கில் காயம்பட்ட நபருக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்–ரே மற்றும் ஸ்கேன் நீதிமன்றத்திற்கு நான் எடுத்து வரவில்லை. மருத்துவமனையில் உள்ளது. அல்னா என்ற எலும்பு வைட்டமின் குறைபாடினால் முறிவு ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை. அல்னா எலும்பு முறிவிற்கு அறுவை சிகிச்சை அவசியம் என்றால் தேவையில்லை. மாவு கட்டு போதுமானது. மேற்படி எலும்பு முறிவு குணமாவதற்கு குறைந்தது 4 வாரங்கள் ஆகும். குத்து காயம் மிகவும் சிறியதான காயம். ஒரு நபர் தவறி கீழே விழும்போது கையை ஊன்றினால் மேற்படி எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர்,
துறையூர்